Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 215

வெள்ளிக்கிழமை
28 ஜூன் 2024

ஆனி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"படம் பார் பாடம் படி எண்டது இப்ப படம் எடு யோகா படி எண்டு மாறப்போகுதோ?"

# சிறுபான்மையினர் மீது வன்முறைகள் தீவிரம்!

## இலங்கை தொடர்பில் அமெ. அறிக்கை

**கொழும்பு, ஜூன் 28**

**அரச அதிகாரிகளின் ஆதரவுடன், இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் தொடர்கின்றன என்று அமெரிக்காவின் மதச் சுதந்திரம் தொடர்பான அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

11

# நாய்க்கடிக்கு இலக்கு சிறுமியொருவர் சாவு!

## சிகிச்சை பெறாததால் துயரம்

கிளிநொச்சி, ஜூன் 28

நாய்க்கடிக்கு இலக்கான சிறுமியொருவர் உரிய சிகிச்சையைப் பெறாத காரணத்தால் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் வசிக்கும் தியாகரன் சாருஜா (வயது-4) என்ற சிறுமியே இவ்வாறு

11

வவுனியா மருத்துவமனையின்

# நோயாளர் விடுதியில் இளைஞனின் சடலம்

வவுனியா, ஜூன் 28

வவுனியா மருத்துவமனையின் நோயாளர் விடுதிக்குள் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மருத்துவமனையில் நீண்ட

11



# வடக்கைப் படமெடுக்க இந்தியா முனைப்பு!

## ட்ரோன் கமராவைப் பயன்படுத்த இலங்கையிடம் அனுமதி கோரல்

கொழும்பு, ஜூன் 28

வட இலங்கையின் மன்னார் தீவு உள்ளிட்ட பகுதிகளில் ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி ஒளிப்படங்களை எடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா அனுமதி கோரியுள்ளது.

11

பருத்தித்துறை மருத்துவமனைக்கு

# பொலிஸ் பாதுகாப்பை நிரந்தரமாகப் பேணுக!

## மருத்துவமனை வட்டாரம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

பருத்தித்துறை மருத்துவமனைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து, நோயாளிகள் மீதும் தாதியர்கள் மீதும் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், அங்கு நிரந்தரப் பொலிஸ் பாதுகாப்பைப் போடுமாறு மருத்துவமனைத் தரப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் யுவதி ஒருவர் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர்மீது நேற்று கத்திவெட்டுத் தாக்குதல் நடத்த எத்தனிக்கப்பட்டுள்ளது. நோயாளியை பார்வையிடுவது போன்று பாசாங்கு செய்துவிட்டு திடீரென தன்னிடம் இருந்த கத்தியை எடுத்து யுவதியை

11

# மயங்கிச் சரிந்து ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 28

வேலைத் தளத்தில் மயங்கிச் சரிந்தவர் உயிரிழந்துள்ளார்.

இளவாலை - பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த மனுவல் அன்ரன் மரியதாஸ் (வயது - 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுண்ணாம்புக்கற்கள் அகழும் இடத்தில் பணிபுரியும் அவர், பணிக்காகச் சென்றபோது காலை 9.30 மணியளவில் மயங்கிச் சரிந்துள்ளார். அவரை தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-20)

# அதிபர்களும் ஆசிரியர்களும் நேற்றும் தொடர் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 28

நீண்டகாலமாக நிலவிவரும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு, பெற்றோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சுமைகள் மற்றும் மாணவர்களின் போஷாக்குப் பிரச்சினைகளுக்

11

# கற்றல் செயற்பாடு இன்று வழமைக்கு

கொழும்பு, ஜூன் 28

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் இன்று கற்றல் செயற்பாடுகள் வழமைபோன்று இடம்பெறும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்

11



# ஆசிரியர் சேவை அத்தியாவசியம்!

## ரணில் நடவடிக்கை



கொழும்பு, ஜூன் 28

ஆசிரியர் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி

11

# எரிவடைந்த நிலையில் மோ.சைக்கிள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணத்தில் வெற்றுக்காணி ஒன்றுக்குள் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று எரிவடைந்த நிலையில் நேற்று அவதானிக்கப்பட்டுள்ளது.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாட்டின் உண்மைநிலை; மறைக்கிறது அரசாங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 28

**நாட்டின் நிலை குறித்த உண்மைத் தகவல்களை மக்களிடம் இருந்து மறைத்து அரசாங்கமானது திறம்பட நடித்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருகின்றது என்று அரசாங்கம் கூறுகின்றது. உண்மையில் இன்று நாட்டில் காலை வாரும் விளையாட்டே நடந்து வருகிறது. இந்தத் தரப்பினரில் ஒருவருடன் மாத்திரம் இணக்கப்பாடு மேற்கொள்வதன் மூலம் வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவரமுடியாது. சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களுடன் எமது நாடு நிலையான எந்தவொரு இணக்கப்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.

உலகில் தலைசிறந்த நட்சத்திர நடிகர்கள் இருந்தாலும், எமது நாட்டில் ஆட்சியாளர்களே சிறந்த நடிகர்களாகத் திகழ்கின்றனர்.

ஊழியர் சேமலாப நிதிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த தகவல்கள் கூட இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த அரசாங்கம் சில தரவுகளை மறைத்துள்ளது.

நாட்டுக்குத் தலைவர்கள் அதிகரித்துவிட்டார்கள். பெரும்பான்மையானவர்கள் வாய்ச்சொல் தலைவர்களாக இருக்கின்றனர்.

எனவே, உண்மையை உண்மையாக உடனே அறிய வேண்டியது மக்களின் பொறுப்பாகும். மீளவும் நெருக்கடியில் வீழ்ந்துவிடாது சிந்தித்து சிறந்ததொரு மாற்றத்தை உருவாக்கவேண்டும்- என்றார். (ச-இ)

# இணையத்தில் நிதிமோசடி; 33 பேர் அதிரடிக் கைது!

## 100 க்கும் மேற்பட்ட கைபேசிகளும் மீட்பு

கொழும்பு, ஜூன் 28

பல வெளிநாட்டுப் பிரஜைகளையும் உள்ளூர் மக்களையும் குறிவைத்து இணையம் ஊடாக மிகப்பெரும் நிதிமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வெளிநாட்டு பிரஜைகள் உட்பட 33 பேர் நீர்கொழும்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் நீர்கொழும்பிலுள்ள வீடொன்றில் சோதனை நடத்திய போது இரண்டு பெண்கள் உட்பட 13 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் மோசடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட 57 கையடக்கத் தொலைபேசிகள் , 13 கணினிகள் மற்றும் 3 மடிக்கணினிகள் கைப்பற்றப்பட்டன.

மேலும், நீர்கொழும்பில் மற்றொரு சொகுசு வீட்டில் பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 19 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 52 கைபேசிகள் மற்றும் 33 கணினிகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார் கைப்பற்றினர்.

அவர்களின் கிளைகள் டுபாய், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலும் இருப்பது தெரியவந்துள்ளது.

அதேவேளை, சமூக ஊடகங்கள் வாயிலாக பிரபல நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிகள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாகச் செயற்படவேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

# குளவிக்கொட்டுக்கு 30 மாணவர் பாதிப்பு

திருகோணமலை, ஜூன் 28

குளவிக்கொட்டுக்கு இலக்கான 30 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மூதூரிலுள்ள பாடசாலையொன்றில் மாலை நேர வகுப்புக்குச் சென்ற, தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகினர். (ப-125)

# பொதுவேட்பாளர் தெரிவு அபிவிருத்திக்குப் பாதிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 28

பொதுவேட்பாளரை நிறுத்துவது மக்களையும், அவர்களுக்கான அபிவிருத்திகளையும்பின்னுக்குக் கொண்டு செல்லும் ஒரு செயற்பாடாகும்.

-இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் பேரம் பேசும் சக்தியாக மாறவேண்டும் எனில் யார் ஜனாதிபதியாக வரப் போகிறாரோ அல்லது அந்தப் போட்டியில் யார் முன்னிலையில் உள்ளாரோ அவருடன் தான் பேரம் பேசமுடியும்.

சம்பந்தமில்லாதவருக்கு ஆதரவு அளிப்பது எமக்கு இழப்புத்தான். அது ஆரோக்கியமானது அல்ல.

ரணில் விக்கிரமசிங்க, சஜித், அநுர ஆகியோர் தான் இந்தப் போட்டியிலுள்ளனர். அவர்களுடன் பேசி அல்லது அதில் வெல்லக் கூடியவருடன் பேசித் தான் நாம் எமக்கானவற்றைப் பெறவேண்டும். அதை விடுத்து பொதுவேட்பாளர் என்பது தேவையற்ற விடயம் - என்றார். (ச-18)

# 'யுக்திய' 807 பேர் கைது

கொழும்பு, ஜூன் 28

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' தேடுதலின்போது 807 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த தேடுதலின்போது 52 கிலோ 616 மில்லிகிராம் ஹெரோய்ன், 142 கிலோ 453 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டன.

யுக்திய நடவடிக்கைகளில் இதுவரை 778 பதிவு செய்யப்பட்ட பாதாள உலகக் குழு குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# பெரமுன ஆதரவளிப்பின் ரணிலுக்குத் தோல்வியே!

## கூறுகிறார் ராஜித



கொழும்பு, ஜூன் 28

ராஜபக்சக்களின் ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினால் வெற்றிபெறுவது சவால்மிக்கதாக அமையக்கூடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வரிசை யுகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவுக்குக் கொண்டுவந்தார். நாட்டை மீட்டெடுப்பதற்குரிய அவரின் வேலைத்திட்டங்கள் சிறப்பாக உள்ளன.

நான் ஆளுங்கட்சிப் பக்கமா? எதிரணி பக்கமா? என்பதைவிட மக்கள் பக்கம் நிற்கின்றேன் என்பதே முக்கியம். ஆளுங்கட்சியுடன் நான் இணையவில்லை. எனினும், கருத்தியல் ரீதியில் ஒருமைப்பாடு உள்ளது. அமைச்சரவையில் அமர்வதற்கு நான் தயாரில்லை. சஜித் பிரேமதாஸவே தற்போதைய எனது அரசியல் தலைவர். எனினும் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதி முதலே ரணிலுடன் செயற்பட்டுவருகின்றேன் - என்றார். (ச-இ)

# மக்களின் பணத்தில் ஊழல்; கோத்தாபய மீது முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 28

'ஊழலுக்கு எதிரான மக்கள் இயக்கம்' என்ற பெயரில் நிபாய் என்பவரும் சட்டத்தரணி அ.சுவஸ்திகாவும் இணைந்து, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு எதிராக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலும், ஊழல் விசாரணைப் பிரிவிலும் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளனர். பாதுகாப்புச் செயலர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் மக்களின் 1.5 பில்லியன் டொலர் பணத்தை முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய தவறாகப் பயன்படுத்தியுள்ளார்.

2008 - 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசவங்கி ஒன்றுக்கு தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக, தகவல் தொழில்நுட்ப நிறுவனமொன்றுக்குக் கேள்விப்பத்திரம் கோராமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அரசவங்கியின் இயக்குநர் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர நிறுவனத்திடமிருந்து பெற்ற பணத்தை பிணை முறைகளில் முதலீடு செய்து வங்கி மேலதிகப் பற்று, கடன் என்பவற்றை பெற்றுள்ளார் என்றும் அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ப-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் நகர்வுக்கு சமிக்ஞை

கொழும்பு, ஜூன் 28

**ஜனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தக்கூடிய அரச அதிகாரிகள் மற்றும் அரச வாகனங்களின் கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்குத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

அதன்படி, தேர்தலுக்குப் பயன்படுத்தக்கூடிய அரச அதிகாரிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை குறித்து ஆவணங்கள் பெறப்படவுள்ளன.

அதேவேளை, மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் மூலம் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அதற்கான சிறப்புப் படிவம் வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை மாத பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் முழுமையாக தேர்தல்கள் ஆணைக்குழு வசமாக உள்ள நிலையில் முதல் கட்ட நடவடிக்கையாக ஆணைக்குழு இந்த நகர்வில் ஈடுபட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்த நகர்வு அனைத்துக் கட்சிகளையும் விரைவில் தேர்தலுக்கான பரப்புரைகளை ஆரம்பிப்பதற்கான சமிக்ஞையை வழங்கியுள்ளது. (ச-இ)

## வங்கிகளுக்கு அபராதம்

கொழும்பு, ஜூன் 28

இலங்கையிலுள்ள இரண்டு தனியார் வங்கிகளுக்கு இலங்கை மத்தியவங்கி அபராதம் விதித்துள்ளது.

சம்பத் வங்கி பி.எல்.சீ. மற்றும் டி.எப்.சிசி. ஆகிய இரண்டு வங்கிகளுக்கே, மத்தியவங்கி, அபராதம் விதித்துள்ளது.

நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தையும் உரிய வாடிக்கையாளர் விழிப்புக் கவன விதிகளையும் கடைப்பிடிப்பதற்குத் தவறியமைக்காகவே நிதியியல் கொடுக்கல் - வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாதமைக்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## சபுகஸ்கந்த மறுசீரமைப்பு

கொழும்பு. ஜூன் 28

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் அதற்குச் சொந்தமான சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அரசாங்கத்துக்குச் சொந்தமான தனி நிறுவனமாக மாற்றப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது 'எக்ஸ்' வலைத்தளப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சம்பளக் கட்டமைப்பு என்பன மீளாய்வு செய்யப்பட்டு சேவைகளுக்காக டிஜிற்றல் தளங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதுடன், எரிபொருளின் தரம், திறன் ஆகியவற்றை அதிகரிக்கவும், செலவைக் குறைக்கவும் முடியும். (ச-இ)

## காதலுக்காக அடிதடி; மாணவர்கள் கைது!



கொழும்பு,ஜூன் 28

கண்டி - திகன பிரதேசத்தில் காதல் தகராறில் 17 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 5 பாடசாலை மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவர் தெல்தெனிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## வீதி விபத்துகளால் நாளாந்தம் 7 பேர் சாவு

கொழும்பு,ஜூன் 28




வீதி விபத்துகளால் நாளாந்தம் சுமார் 7 பேர் உயிரிழக்கின்றனர் என போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார். இலங்கையில் வருடாந்தம் விபத்துகளில் 12 ஆயிரம் பேர் இறக்கின்றனர். நாளொன்றுக்கு சுமார் 7 அல்லது 8 பேர் விபத்துகளில் இறக்கின்றனர். வீதி விபத்துகள் அதிகரிப்பதற்கு மதுபோதையில் வாகனம் செலுத்துவதே பிரதான காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



## மூத்த கல்வியியலாளர் பொ.கமலநாதன் மறைவு

மூத்த கல்வியியலாளரும், சமூக, சமயத் தொண்டுகள் பலவற்றில் முன்னின்று செயற்பட்டு வந்தவருமான பொன்னுத்துரை கமலநாதன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது 77 ஆவது வயதில் காலமானார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பல வருடங்கள் ஆசிரியராகவும், பின்னர் 1994 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை அதிபராகவும் சேவை ஆற்றிய இவர், 1996 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக விளங்கினார். மிகச் சிறந்த ஆளுமை, தலைமைத்துவப் பண்பு மிக்கவரான இவர் விழிப்புல வலுவிழந்தோர் இல்லமான சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தில் நீண்டகாலமாகப் பொருளாளராகவும், இறுதியாக நிர்வாக அங்கத்தவராகவும் செயற்பட்டு பல பணிகளை ஆற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-66)

## தினம் தெரியுமோ

**எல்லா விசயங்களுக்கும் ரண்டுபக்கம் இருக்கும். நாங்கள் பொதுவா ஒருபக்கத்தை மட்டும் பாத்திட்டு அதுதான் சரியெண்டு நினைப்பம். ஆனால் வடிவா உத்துப்பார்த்தால் மற்றப்பக்கமும் நியாயம் இருக்கெண்டு விளங்கும். இன்னும் கிட்டப்போய் பார்த்தால் நாங்கள் சரியெண்டு முதல்ல நினைச்ச பக்கம் உள்ள பிழையளும் சிலவேளை தெரியும். முந்தநாள் ஆளுநரின்ர அலுவலகத்துக்கு முன்னால ஆர்ப்பாட்டமொண்டு நடந்தது. அந்த ஆர்ப்பாட்டத்தில முன்வைச்ச கோரிக்கை அந்தப் பகுதிச் சனத்துக்கு அத்தியாவசியமான ஒண்டு. செவ்வாய்க்கு ஆக்களை அனுப்பிறதுக்கு ஐடியா போடுற இந்தக் காலத்தில, மழைபெய்தால் பள்ளிக்கூடப் பிள்ளையள் இடுப்பளவுக்குமேல உள்ள வெள்ளத்துக்கால நடந்துதான் றோட்டில ஏறுவதை ஆரால ஏற்றுக்கொள்ள ஏலும்? எவ்வளவோ தேவையில்லாத வேலையளைச் செய்யிற அரசாங்கம், அந்தப் பாதையை சீராக்கினால் என்ன குறைஞ்சுபோடும்? எத்தனையோதரம் அங்கத்தைச் சனம் போராடேக்கையெல்லாம், 'அதெல்லாம் செய்து தாறம்' எண்டு கனபேர் வாக்குறுதி குடுத்தும், இதுவரைக்கும் ஒண்டும் நடக்கேலை. காலம் போகப்போக, அங்கத்தைச் சனம் போராட்டம் நடத்தினாலும், அதை உரியவை எட்டியும் பாக்கிறேலை. அந்த வெப்பியாரத்திலதான் சனம் இந்தமுறை ஆளுநரின்ர அலுவலகத்துக்கு முன்னால போராட்டம் நடத்தினது.**

**இவ்வளவும் சரிதான். தங்கட பிள்ளையளின்ர பாதுகாப்பான போக்குவரத்துக்காக அங்கத்தைச் சனம் போராடுறதில எந்தப் பிழையும் இல்லைத்தான். ஆனால் நோக்கம் சரியா இருந்தாலும், வழி சரியில்லாட்டி அந்தப் போராட்டமே பிழைச்சுப்போடும். உந்தப் போராட்டத்துக்கு வந்த பெரியாக்களைவிடவும் பள்ளிக்கூடப் பிள்ளையள்தான்கூட. அதுவும் பள்ளிக்கூட உடுப்போட, கொளுத்திற வெயிலுக்க நிண்டு அந்தப் பிள்ளையள் போராடினதுகள். இந்த வயதில போராடுறது நல்ல விசயம்தான். ஆனால் அந்தப் போராட்ட உணர்வு தானா வரோணுமே தவிர, தங்கட போராட்டத்தின்ர பக்கம் கவனத்தை ஈர்க்கிறதுக்காகச் சின்னப்பிள்ளையளைப் பாவிக்கக்கூடாது. உண்மையில இப்பிடி சின்னப்பிள்ளையளை பள்ளிக்கூட நாளில கொண்டந்து வெயிலுக்குள்ள மணித்தியாலக் கணக்கில நிப்பாட்டி வைச்சதுக்கு சிறுவர் உரிமை மீறல் எண்டு வழக்கே போடலாம். (புறக்கணிப்புப்போராட்டம் நடந்ததால பள்ளிக்கூடங்கள் இயங்காதது வேற கதை) அதோட இப்பிடி போராட்டங்களுக்கு பிள்ளையளை வலிஞ்சு கொண்டாறதால அதுகளின்ர மனநிலையும் சின்னனிலயே பிழையா மாறக்கூடும். உதாரணத்துக்கு அண்டையான் ஆர்ப்பாட்டத்தில ஒரு பள்ளிக்கூடப் பெடிப்பிள்ளை ஒருத்தர், 'ஆளுநரே வெளியால வா'எண்டு பெரிசா கத்தி ஆர்ப்பாட்டம் செய்தவர். உண்மையா அந்தப் பிள்ளைக்கு ஆளுநர் எண்டால் ஆரெண்டே தெரிஞ்சிருக்காது. ஏன் அப்பிடிக் கத்தினன் எண்டும் விளங்கியிருக்காது, பெரியாக்கள் கத்தச் சொல்ல அந்தப் பிள்ளையும் கத்தியிருக்கும். ஆனால் தாங்கள் போறபாதையை நல்லாப் போடவேணும் எண்டா, இப்பிடிக் கத்தவேணுமாக்கும் எண்டு அந்தப் பிள்ளை நினைச்சிருக்கலாம். இந்த நினைப்பு பிறகு பள்ளிக்கூடத்தில அதிபருக்கு எதிராகவும் கத்தவைக்கும், வீட்டிலையும் கத்தவைக்கும், அப்பிடியே எல்லா இடத்திலையும் அந்தப் பிள்ளை 'ஒத்தோட முடியாத'ஆளா மாறவும் கூடும்.**

**எங்கட பிரச்சினையளுக்காக நாங்கள் போராடத்தான் வேணும். ஆனால் அதுக்காக எங்கட பிஞ்சுகளின்ர மனதில நஞ்சை விதைச்சு, அதுகளின்ர வாழ்க்கையை பிழையான பக்கம் திருப்பிற வேலையைப் பாக்கக்கூடாது.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்வான பாலத்தால் அந்தரிக்கும் மக்கள்!

## மேம்பாலமாக மாற்றக் கோரிக்கை

கிளிநொச்சி - அக்கராயன் தாழ்பாலத்தின் ஊடாகப் பயணிக்கும் மக்கள் ஆண்டுதோறும் மழை காலத்தில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் குளத்திலிருந்து வெளியேறும் வெள்ளம் திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் உள்ள 25 அடி நீளமான வான் வழியாக வெளியேற முடியாமல் வீதியை மேவிப்பாய்கிறது.

இதனால் அக்கராயன் பிரதேச மருத்துவமனை அம்புலன்ஸ் உட்பட அனைத்து வாகனங்களும் மாற்று வழிகளைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக கடந்த 14 ஆண்டுகளாகக் கோரிக்கைகள்முன்வைக்கப்பட்டும் அவை நிராகரிக் கப்பட்டு வருகின்றன. தாழ்பாலத்தை மேம்பாலமாக மாற்ற உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-25-13)




# விசேட நடமாடும் சேவை

யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில், இதுவரை பிறப்பைப் பதிவுசெய்யாத சிறுவர்கள் மற்றும் ஏனைய நபர்களுக்குப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் பிறப்புப் பதிவு செய்யும் விசேட நடமாடும் சேவை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. யாழ். மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில், மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ். மாவட்ட உதவிச் செயலாளர் உ.தர்சினி, பிரதிப் பதிவாளர் நாயகம் கே.நடராஜா, மேலதிக மாவட்டப் பதிவாளர்கள், மாவட்டச் செயலகப் பதிவாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெற்றோர் மற்றும் சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)

# பிரிட்டன் தூதுவருடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 28

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்றூ பற்றிக் உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸை நேற்றுமுன்தினம்புதன்கிழமை சந்தித்துக்கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு, தொழில் வாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-20-26)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 08 . 1945



மறைவு 25 . 06 . 2024

## பிரகாசராசா காணிக்கை மரியை (தங்கம்)

குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசராசா காணிக்கை மரியை (தங்கம்) கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்திநாதர் - செபமாலை மரியை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான பிலிப் - அஞ்சலினா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரகாசராசா (பெரியதம்பி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கெல்வின் (நோர்வே), மற்றும் கிறசன்சியா (கிளி), சுவர்ணா (பிரான்ஸ்), மார்க்கபோலோ (றிங்கோ - பிரான்ஸ்), ஜிம்புறோன் (பிரான்ஸ்), மேரி விக்கியானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகாயராணி (நோர்வே), காலஞ்சென்ற ஆசிரியர் அகஸ்ரின், எட்வேட் (ஜீவநாயகம் - பிரான்ஸ்), யூலியானா (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்), றஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கெவின்றா, ஆன்றியா, அடம்ஸ்மித், காலஞ்சென்ற கிருஷான் மற்றும் தனுஜா, கீர்த்திகா, நிசாந்தினி, நிரோஷினி, புளோரன்சியா, மயூரன், மக்ஸ்மலன், ஜஸ்மி, கதிஷன், கனிஷன், சுஜிகா, ஜெசிக்கா, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (28.06.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் 51, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்/புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்ததன் பின்னர் யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: 077 489 9843
+33 614 910 054

(CS/832) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# வலிந்து சூடும் முடி!

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து முற்றாக மீண்டிருக்கின்றது என்று அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இலங்கையின் கடன்களை மறுசீரமைக்க சீனா சம்மதித்ததையடுத்து இந்த அறிவிப்பு ஜனாதிபதியிடமிருந்து வெளிப்பட்டிருப்பதுடன், தன்னுடன் பயணிப்பதா? அல்லது இருளில் அதிகாரத்தைத் தேடிக்கொண்டிருக்கும் எதிர்த் தரப்பினருடன் பயணிப்பதா? என்பதைப் பொதுமக்கள்தான் தீர்மானிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் வரிகளும், விலையேற்றங்களும், வரிசைகளுமே எஞ்சியிருந்தன. ஒவ்வொருநாளும் ஏதோவொரு பொருளின் விலை சில நூறு ரூபாவால் அதிகரித்துக்கொண்டே சென்றது. அவ்வாறானதொரு நிலை தற்போது இல்லை என்பது பட்டவர்த்தனமானதே. ஆனால், இதன் பின்னணியில் இருப்பது ஆக்கபூர்வமான பொருளாதாரச் சீரமைப்பும் பொருளாதார மறுமலர்ச்சியும்தானா என்ற குறைந்தபட்சப் புரிதல் இல்லாமல் இலங்கையர்கள் இல்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு நிரந்தரமாக மீண்டுவர வேண்டுமாயின், இறக்குமதிப் பொருளாதாரத்தை நம்பியிருக்கும் நிலைமை இல்லாமற் செய்யப்பட வேண்டும் என்று நிபுணர்கள் பலரும் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றபோதிலும், இலங்கைத்தீவு இன்னமும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தியதாக இல்லை. மிக இலகுவாகத் தன்னிறைவு காணக்கூடிய துறைகளில்கூட இறக்குமதியில் தவிர்க்கமுடியாத்தனம் இருக்கவே செய்கின்றது. ஆக, கடன்களாலும் நன்கொடைகளாலும் நகர்ந்துகொண்டிருக்கும் 'பொருளாதாரச்சுழற்சியை' எவ்வாறு 'பொருளாதார மீட்சி' என்று கொள்ளலாம்.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். கோத்தாபயவின் கரங்களில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருந்த இறுதிக் காலங்களில் 'அரகலய போராட்டம் முழுப் பலம் பெற்றிருந்த நாள்களில்' இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணாதமையே பொருளாதாரச் சரிவுக்குப் பிரதான காரணம் என்று பலரும் ஒப்புக்கொண்டிருந்தனர். ஜனாதிபதி ரணிலும்கூட இந்தக் கருத்தை ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பகிரங்கமாக ஏற்றுள்ளார். ஆனால், நாட்டு மக்களுக்கு நேற்றுமுன்தினம் ஆற்றிய உரையில் ஓர் இடத்திலேனும் இனப் பிரச்சினை தொடர்பில் மறந்தும் ஜனாதிபதி ரணில் தொட்டுப்பார்க்கவில்லை. இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பிலோ, அதற்கான தீர்வு தொடர்பிலோ அல்லது 13ஆவது திருத்தம் தொடர்பிலோ எந்தவொரு கோடுகாட்டல்களையும் மேற்கொள்ளாமல்தான் ரணில் தன் நீண்ட உரையை நிகழ்த்தியிருந்தார். ஆக, அவருடைய உரை பொருளாதார மீட்சி தொடர்பான தெளிவூட்டலாக அல்லாமல், ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்த அரசியல் சூட்சுமங்கள் நிரம்பியதாகவும், தேர்தலை நோக்கிய காய்நகர்த்தலாகவும்தான் அமைந்திருக்கின்றதே அன்றி வேறில்லை.

நாடு பொருளாதாரத்தில் மீண்டிருக்கின்றது என்றால், கிராமியப் பொருளாதாரங்கள் வளம் பெற்றிருக்கவேண்டும். தனிநபர் பொருளாதாரம் பலப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு எந்த மாற்றமும் உணரப்பட்டதாகவில்லை. ஒவ்வொரு தனிமனிதனும் அன்றாடப் பொழுதைப் போக்காட்டுவதை ஒரு போர்முனையாகக் கொண்டிருக்கையில், 'நாடு மீண்டுவிட்டது, சாதனை செய்துவிட்டேன்' என்றெல்லாம் ஜனாதிபதி ஜாலம் காட்டுவது அவரது அரசியல் முதிர்ச்சிக்கு ஏற்றதல்ல. கதைத்துக் கொண்டிருப்பது கணக்குப்பிள்ளைக்கு அழகல்ல. கணக்குத்தான் கதைக்க வேண்டும்.






# இலங்கையின் மைல்கல்; ஐ.எம்.எப். பாராட்டு

**கொழும்பு, ஜூன் 28**

**இலங்கை, அதன் பிரதான உத்தியோகபூர்வ கடனளிப்பவர்களுடனான தனது கடன் ஒப்பந்தங்களை இறுதிசெய்யும் அறிவிப்பை சர்வதேச நாணயநிதியம் வரவேற்றுள்ளது.**

கடன் ஒப்பந்தங்களை இறுதிசெய்வது ஒரு பிரதான மைல்கல். கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்வதற்கும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் இலங்கையை ஒரு படி மேலே கொண்டு செல்கிறது.
எதிர்காலத்தில் தனியார் கடன் வழங்குநர்களுடன் உடன்பாடுகளை எட்டுவதில் விரைவான முன்னேற்றம் இருக்கும்.
இது சமீபத்திய பொருளாதார சவால்களுக்கு மத்தியில், நாட்டின் நிதி நிலையை ஸ்திரப்படுத்துவதற்கான முக்கியமான முன்னேற்றங்களை குறிப்பதாக உள்ளது என்று சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான மூத்த தூதரகத் தலைவர் பீற்றர் ப்ரூயர் தெரிவித்தார். (ச-இ)

## வர்த்தக ஏற்றுமதி மே மாதம் உயர்வு

கொழும்பு, ஜூன் 28
இலங்கையின் வர்த்தக ஏற்றுமதிகள் கடந்த மே மாதம் 9.4 சதவீத அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளன என புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.
மே மாதத்தில் மாத்திரம் 960.2 மில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தக ஏற்றுமதி இடம்பெற்றுள்ளது. அதேநேரம் 2023ஆம் ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு மே மாதத்தின் ஏற்றுமதி நடவடிக்கைகள் 5.81 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கடன்மறுசீரமைப்பு ஜப்பான் வரவேற்பு

கொழும்பு, ஜூன் 28
இலங்கையின் கடன்மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கைக்கும் கடன் வழங்குநர் குழுவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை ஜப்பான் வரவேற்றுள்ளது. 2023 இல் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழு ஓ.சி.சி.யை ஆரம்பித்துவைத்ததன் மூலம் இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஜப்பான் பிரதான தலைமைத்துவத்தை வழங்கியிருந்தது. இந்தக் கட்டமைப்பின் கீழ் இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை இறுதிசெய்துள்ளமை ஒருமைல் சாதனை. எதிர்காலத்தில் நடுத்தரவருமானம் பெறும் நாடுகளின் கடன்மறுசீரமைப்புக்கான ஓர் உதாரணமாக இது விளங்கும் என்று ஜப்பானின் நிதியமைச்சர் சுஜிகி சுனிச்சி தெரிவித்துள்ளார். (ச-இ)

## இறக்குமதி, ஏற்றுமதிகளால் 3 பில்லியன் டொலரை இழக்கும் இலங்கை

சட்டவிரோத கொடுக்கல் - வாங்கல்கள் காரணமாக ஆண்டுதோறும் 3 பில்லியன் டொலரை இலங்கை இழக்கின்றது என்று ஊழலுக்கு எதிரான சர்வதேச நிதியமைப்பு தெரிவித்துள்ளது.
இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
2009 - 2018 காலப்பகுதியில் 40 பில்லியன் டொலர் இறக்குமதி ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காகத் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இலங்கைக்கு 2022 ஆம் ஆண்டு 34.8 பில்லியன் வெளிநாட்டுக்கடன் நிலுவையாகக் காணப்பட்டது- என்றுள்ளது. (ச-25-6)

## தீர்வு வழங்குவதில் காலதாமதம்

*கிராமஅலுவலர்கள் போர்க்கொடி*

தங்களின் பல கோரிக்கைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளமையை கண்டித்து கிராம அலுவலர்கள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் 3 நாள்கள் ஈடுபட்டுள்ளது
கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எங்களின் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்காவிட்டால், மாவட்ட அளவில் போராட்டம் தொடரும் என்றும் கிராம அலுவலர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

### நாளை

29.06.2024
சனிக்கிழமை
ஆனி - 15
நல்லநேரம் : 02.56 - 04.26
ராகுகாலம் : 08.56 - 10.26

### நாளொரு நல்வார்த்தை

**மெதுவாகப் பேசு. அது உன் இரகசியங்களைப் பாதுகாக்கும் நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.**

**- வள்ளலார் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் நாளை குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 28
'சேவ் ஏ லைப்' எனும் நிறுவனம் ஏற்பாடு செய்த குருதிக் கொடை முகாம், இல.460, நாவலர் வீதியில் அமைந்துள்ள நிறுவன அலுவலகத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை இடம்பெறவுள்ளது. (ப-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். வீண் செலவுகள் ஏற்படும். துணிச்சலுடன் முடிவு எடுப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். சிவபெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். உதவி கிடைக்கும். காரியம் இழுபறியாகி முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். அம்பிகையை வழிபடுவது நன்று.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச் னைகள் ஏற்படக் கூடும். உறவினர்களால் குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உதவி கிடைக் கும். மகாவிஷ்ணு வழிபாடு நலம் சேர்க்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உதவி கிடைக்கும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். சங்கடங்கள் ஏற்படக் கூடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சி களைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பொறுமை அவசியம். முருகப்பெருமானை வழிபட நன்மைகள் உண்டாகும்.

**விருச்சிகம் :** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். சில சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். காரியம் இழுபறியாகும். புதிய முயற்சிகளை மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். உறவுகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நன்று.

**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும். சற்று சோர்வு உண்டாகும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்லவும். ஆஞ்சநேயர் வழிபாடு நலம் சேர்க்கும்.

# இறுதியாட்டத்தில் தென்னாபிரிக்கா

**ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் தென்னாபிரிக்கா அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றியீட்டியுள்ளது.**



அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆப்கான் அணியினர் ஆரம்பம் முதலே தென்னாபிரிக்கா அணி பந்துவீச்சாளர்களைச் சமாளிக்க முடியாது திணறினர்.
ஆப்கான் வீரர்கள் ஒற்றை இலக்கங்களுடன் பவிலியன் திரும்ப 11.5 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 56 ஓட்டங்களை மட்டுமே பெற்றது ஆப்கானிஸ்தான் அணி. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 8.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது. (எ)

## அரச அலுவலர்களுக்கு ஆக்கத்திறன் போட்டி

கொழும்பு, ஜூன் 28
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, அரச நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் ஆக்கத்திறன்களை மேம்படுத்தல், மதிப்பளித்தல், ஆக்கங்களை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் அதன் மூலம் அரச நிறுவனங்களின் கலாசார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன், இந்த வருடமும் அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
போட்டிப் பிரிவுகளாக சிறுகதை, பாடலாக்கம், கவிதை, சிறுவர் இலக்கிய ஆக்கம், குறுநாடகம், சித்திர ஆக்கம், குறுந் திரைப்படம், புகைப்படம் போன்றன குறிப்பிடப்பட்டுள்ளன. சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆக்கங்களும் செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு 8 ஆம் மாடி, செத்சிறிபாய 1 ஆம் கட்டடம், பத்தரமுல்லை என்ற முகவரிக்கு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படவேண்டும். மேலதிக தகவல்களை www.cultural.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலமாகவோ அல்லது 0112861325 மற்றும் 0761199787 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ள முடியுமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ப)

## 'தென்தீபம்' இதழுக்கு ஆக்கம் அனுப்பலாம்

யாழ்ப்பாணம். ஜூன் 28
தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையால், ஆவணப்படுத்தப்படும் வகையில் வெளியிடப்படவுள்ள 'தென்தீபம்' இதழ் - 8 நூலுக்கான ஆக்கங்கள், வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச அரசசேவை அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து கோரப்பட்டுள்ளன.
கலை, கலாசாரம், வரலாறு, சமூக வாழ்வியல், தொல்லியல் மரபுரிமைகள், கிராம நாமங்கள், நாட்டுப்புறவியல், ஆன்மீகம் போன்ற பண்பாட்டம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான ஆய்வுக் கட்டுரைகள், கவிதை, சிறுகதை, ஆவணத்தரவுகள், நேர்காணல்கள், பல்சுவை அம்சங்கள் போன்ற ஆக்கங்களை வழங்கமுடியும்.
ஆக்கங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வேலணை அல்லது செயலாளர், பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 28
வடவரணி முன்பள்ளியின் விளையாட்டு விழா, முன்பள்ளிமுகாமைத்துவக் குழுத் தலைவர் திருமதி சு.தமிழினி தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வரணி வடக்கு அ.த.க. பாடசாலை அதிபர் நீ.வசந்தரூபன், குடும்பநல உத்தியோகத்தர் திருமதி சு.சிந்துஜா, கௌரவ விருந்தினர்களாக வரணி குடும்ப முன்பள்ளித் தலைவர் லோ.கேதிகா, கொடிகாமம் பனை தென்னைவளஅ. கூ. சங்கத் தலைவர் செல்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-159)

◆◆◆◆

ரட்ணா முன்பள்ளியின் மழலைகளுக்கான விளையாட்டு விழா, வரணி மத்திய கல்லூரி மைதானத்தில், ரட்ணா முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் தெ. மிகுந்தன் தலைமையில் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினர்களாக வரணி மத்திய கல்லூரி அதிபர் ஆ. தங்கவேல், வரணி பனை தென்னைவள அபிவிருத்தி சங்கங்களின் கொத்தணி முகாமையாளர் க.அருட்செல்வம், பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் சமூக சேவையாளருமான சி.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

அமரர் திருமதி தம்பையா நாகம்மாவின் முதலாம் ஆண்டு சிராத்த திதியை முன்னிட்டு நினைவுப் பேருந்து நிலையத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் காங்கே சன்துறை வீதி, அரசடிச்சந்தி, மாவிட்டபுரம் எனும் முகவரியில் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத் தலைவர் இ.சாந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-66)

## பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 28

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய பரிபாலனசபையினரின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான சமயப் பேச்சுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாலர் பிரிவு, ஆரம்பப் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய ஐந்து பிரிவுகளின் அடிப்படையில் குறித்த போட்டிகள் நடைபெறுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-25-66)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல் திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வட மாகாணத்தில் காணப்படுகின்ற அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவது தொடர்பான செயற்றிட்டத்தை விரைவாக முன்னெடுக்கும் நோக்கில் முக்கியமான தீர்மானங்களைத் திட்டமிடுவதற்காக இந்த ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்வில் வடமாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-25-66)

# வடக்கின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே இலக்கு

### ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு



**வவுனியா, ஜூன் 28**


**வடக்கின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான இலக்கு என்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய வடக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தொழில் அற்றோர் பிரச்சினையைத் தீர்த்துவைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் வாழ்வாதார உதவித் திட்டங்களும் தற்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாட்டின் ஏனைய மாகாணங்களைப்போல வடக்கையும் பொருளாதாரத்தில் மேம்பட்ட மாகாணமாக மாற்றுவதே ஜனாதிபதியின் விருப்பமாக உள்ளது.

பொருளாதார வலயங்களை அமைப்பதுடன், பலாலி விமான நிலைய சேவைகளையும், காங்கே சன்துறை துறைமுகத்தையும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-125-27)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 13 - 05 - 1947

மறைவு 25 . 06 . 2024

அமரர்

**பொன்னுத்துரை கமலநாதன்**

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவரும்,
கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபரும்,
பழைய மாணவர் சங்கத் தலைவரும்,
நம்பிக்கை நிதியத்தின் செயலாளராகவும் சேவையாற்றியவராவார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்,**
**கொக்குவில்.**

(CS/55502) J-1

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**

**வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு,சமைத்த உணவு**

**வழங்குவதற்கான பெறுகைகள்-2024.08.01 தொடக்கம் 2025.06.30 வரை**

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு .சமைத்த உணவு வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்க-ளிடமி ருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டியநிலையம் | கேள்விஉத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | NP/21/05/Diet/JF/ 03/2024-2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலை (அனலைதீவு) | 25,000.00 |
| 02. | D/JF/2024/02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 260,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு. வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

    அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் /சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    இ. அத்துடன். வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212226253.0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம் முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரைபரிசீலிக்கமுடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 28.06.2024 ஆம் திகதி முதல் 11.07.2024 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 3.000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 12.07.2024 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 05.07.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப் பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.


**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
021-222-3725, 021-222-6253, 021-221-4966 **தொலைநகல்:** 021-222-9971
**மின்னஞ்சல்:** rdhsjaffna15@gmail.com

(CR/42719) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 04 . 1945



மறைவு 27 . 06 . 2024

## விசுவநாதன் கமலநாதன்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதன் கமலநாதன் நேற்று (27.06.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதன் - தில்லையம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அம்பிகைபாகு - மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற இந்திராதேவியின் கணவரும், தர்சினி, தயாளினி (கனடா), வசந்திரா, பிரதீஸ் (கனடா), கீதாஞ்சலி (பிரான்ஸ்), சர்மிலன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான பத்மினி, ஸ்ரீரங்கநாதன், விமலநாதன் ஆகியோரின் சகோதரரும், சூரியகுமார், பாஸ்கர் (கனடா), செல்வகுமார், திவ்யா, விஜயபாஸ்கரன் (பிரான்ஸ்), அஜித்திரா ஆகியோரின் மாமனாரும், சுஜந்தன், கவினா, கஸ்வின் (கனடா), சஜித் (கனடா), டக்சன், டதுசன், சவின், அன்விகா, ஆருத்திகா, டிருக்சன் (பிரான்ஸ்), ஆருசன் (பிரான்ஸ்), ஹர்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 905 1312

பூகர்மடம்,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

(CS/55512) J-1


# குடியிருப்புக்குள் நாய்களுக்கு காப்பகம் அமைக்க வேண்டாம்

## வவுனியாவில் எதிர்ப்பு

வவுனியா, ஜூன் 28

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் புலம்பெயர் தேசத்தில் இருந்து வருகை தந்த பெண்ணொருவர் நாய்களுக்குக் காப்பகம் அமைக்கும் நிலையில், அந்த முயற்சிக்கு குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுமக்களால் பொலிஸ் நிலையத்திலும், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் என்பவற்றுக்கும் பொதுமக்களால் நேற்று முறைப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

நாய்கள் காப்பகம் அமைக்க தாம் எதிர்ப்பில்லை என்ற போதிலும், அதன் சுகாதாரத் தன்மைகள் மற்றும் நீண்டகால பராமரிப்புத் திட்டம் என்பன உறுதிப்படுத்தப்படவில்லை என்பதே பொதுமக்களின் குற்றச்சாட்டாகக் காணப்படுகின்றது.

பொதுமக்களின் கருத்தைக் கேட்டறிந்த பொலிஸார், சுகாதாரப் பிரிவினரின் அனுமதியைப் பெற்ற பின்னர் காப்பகத்தை அமைக்குமாறும், அதுவரை நாய்களை காப்பகத்துக்குக் கொண்டுவர வேண்டாம் என்றும் அந்தப் புலம்பெயர் பெண்ணுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

(ம-110)


## தென்னம்பிள்ளை விற்பனைக்கு

நல் இன தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. மொத்த விற்பனை விலை.

பெரியது - 140/=
சிறியது - 180/=

தொடர்பு: +94 77 330 1798
+94 77 114 5769
+94 77 474 9140



# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 10 . 1959



மறைவு 25 . 06 . 2024

## சுந்தரராசன் திருமணி

சுன்னாகம் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராசன் திருமணி கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசா மற்றும் சுந்தரம் (லண்டன்) தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரராசன் அவர்களின் அன்பு மனைவியும், ஜேஸ்ரராஜன் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், நிகாயினி (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், அருவி, விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, சிவப்பிரகாசம் (கனடா), தியாகலிங்கம், மகேந்திரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி (கனடா), ரவீந்திரராசா (இந்தியா), இராஜலக்ஷ்மி (லண்டன்), சௌந்தரராஜா (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சுந்தரராசன் (கணவர்) - 076 813 3922
ஜேஸ்ரராஜன் (மகன்) - 077 547 1513

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(CS/55509) J-1



# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1945



மறைவு 27 . 06 . 2024

## நடராசா புஸ்பராணி

மானிப்பாய் வடகிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா புஸ்பராணி அவர்கள் நேற்று (27.06.2024) வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் கார்த்திகேசு-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் நடராசா (மெக்கானிக்-லேனுகா கராஜ் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அம்பிகாவதியின் அன்புச்சகோதரியும், லேனுகா (பிரான்ஸ்), இராஜகரன், சுதாஜினி (பிரான்ஸ்), சுதர்சன், உதயகுமார் (பிரான்ஸ்), வினோதினி (**Teacher Angel in ternational School manipay**), சுகந்தினி (பிரான்ஸ்), சதீஸ்குமார், செந்தூரன், மோகனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலச்சந்திரன் (பிரான்ஸ்), ஜெகதாஜினி, பற்குணராஜா (பிரான்ஸ்), ரஞ்சிதமதி, டெனி (பிரான்ஸ்), ஞானராஜா, அருள்குமார் (பிரான்ஸ்), றஜீனா, பகிர்தா, நிதர்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் றானுசன், யனுஸ், தனுசியா, தக்சா, தரணியா, துஷ்யந்தன், சாருஜா, ராகுலன், மதுஜன், றக்சனா, நித்திக், சாய்நேகா, இனியா, கஷ்வின், பூர்விகா, கியாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.06.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 834) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பச்சிலைப்பள்ளியில் இரண்டாம் கட்ட அரிசி

கிளிநொச்சி, ஜூன் 28

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட அரிசி விநியோகம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட கோவில்வயல், முகாவில்,மாசார், இயக்கச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களுக்கு அவை கையளிக்கப்பட்டன. நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள் கலந்துகொண்டனர். (ச-9)



# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 28

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையமும், நெடுந்தீவுப் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த, நடமாடும் சேவை நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நெடுந்தீவுப் பிரதேச செயலர் நிவேதிகா தலைமையில் இடம்பெற்ற நடமாடும் சேவை ஊடாக அடையாள அட்டைக்கான விண்ணப்பம் மற்றும் இலவச சட்ட ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டன. (ப-20)




தாச்சிச் சுற்றுப்போட்டி

# இறுதியாட்டத்தில் சங்கானை கிங்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறை யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடர் அண்மையில் தாவடி காளி அம்பாள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணியும் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணியும் அரையிறுதிப் போட்டியில் மோதிக் கொண்டன.

இதன்போது புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணியை 9 : 8 என்னும் புள்ளிக் கணக்கில் வீழ்த்தி சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழக அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (ச-125)



# போராட்டத்தில் தாக்குதல்; கண்டித்து ஊர்வலம்

கொழும்பு, ஜூன் 28

வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை கவனவீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பில் பாடசாலை ஆசிரியர், அதிபர்களது போராட்டத் தளத்தில் அவர்கள் மீது தண்ணீர்த் தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதை கண்டித்தும், தமது நியாயமான கோரிக்கையாக காணப்படுகின்ற சம்பள உயர்வை உடனடியாகத் தரவேண்டும் எனக் கூறியும் இந்த ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஊர்வலம் வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள்பீட கட்டடத் தொகுதியிலிருந்து ஆரம்பமாகி நகர் வழியாக பழைய பேருந்து நிலையத்தை சென்றடைந்து நிறைவடைந்தது. (ச-18)

# மிக்ஸரில் பல்லி ரூ.15,000 தண்டம்

நுகர்வோருக்கு பல்லியுடன் மிக்ஸரை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடை உரிமையாளர் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சூழலிலுள்ள இனிப்புக்கடையில் விற்பனைசெய்யப்பட்ட மிக்ஸரில் பொரித்த பல்லி காணப்பட்டதையடுத்து உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது விற்பனையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்ப டையில் 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (ச-26)



# சிரமதானம்

மன்னார், ஜூன் 28

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, மன்னார் பொது மருத்துவமனையில், மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி எம்.எச்.எம். அஸாத் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிரமதானம் இடம்பெற்றது.

மன்னார் பொது மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் உட்பட மருத்துவமனையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் படையணி மாணவர்கள், மருத்துவமனையில் பணியாற்றும் அனைவரும் ஒன்றிணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ப-60-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தைக் கட்டியெழுப்ப காணிகளை விடுவியுங்கள்!

## மன்னார் மாவட்டச் செயலர் வேண்டுகோள்

மன்னார், ஜூன் 28
மன்னாரில் பொது மக்களின் விவசாயக் காணிகளை வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன கையகப்படுத்தியுள்ளதால் மீள்குடியேற்ற மக்கள் வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மை மற்றும் நல்லிணக்க பொறி முறைகளுக்கான இடைக்கால செயலகத்தின் ஏற்பாட்டில் உத்தேச சட்டவரைவை நிறுவுவதற்கு ஜனாதிபதியின் ஏற்பாட்டில் நியமிக்கப்பட்ட குழு வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களில் சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.
அந்தக் குழுவுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் மேற்படி எடுத்துரைத்தார்.
இடம்பெயர்ந்தவர்கள் மீள்குடி யேறிய பின்பு தங்கள் விவசாய நிலங்களை மீளத்தருமாறு கோரி நிற்கின்றனர். போர் நிறைவடைந்த தன் பின்னர் வன வளத் திணைக்களம்,வன ஜீவராசிகள் திணைக்களம் கிட்டத்தட்ட 36 வீதம் காணிகளைப் பிடித்துள்ளன.
நூறுக்கு மேற்பட்ட விவசாயக் குளங்களை தமது எல்லைக்குள் அவை அடையாளப்படுத்தி உள்ளமையால் விவசாய அபிவிருத்தியை புனரமைப்புச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.
இதனால் மீள்குடியேறி பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நல்லிணக்க அடிப்படையில் அவர்களின் நிலங்களை மீள வழங்குவதில் நாங்கள் சவால்களை எதிர் நோக்குகிறோம். எனவே, அரசாங்கம் ஒரு பொதுவான கொள்கைகளை வகுத்து செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ச-25-56-60)

# ‘ஜெய் பலஸ்தீன்’ கோத்தால் சர்ச்சை

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வில் ஹைதராபாத் உறுப்பினர் அசாதுதீன் குவாசி 'பலஸ்தீனம் வாழ்க' (ஜெய் பலஸ்தீன்) என முழக்கமிட்டதால் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது. சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
இதன்போது ஹைதராபாத் உறுப்பினர் அசாதுதீன் குவாசி 'பலஸ்தீனம் வாழ்க' (ஜெய்பலஸ்தீன்) என உரையாற்றியுள்ளார்.
இவர் இவ்வாறு உரையாற்றிய வேளையில் பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்கள் 'ஜெய்ராம்' என கூச்சலிட்டனர். அவரது உரை பெரும் சர்ச்சையை கிளப்பியிருந்தது. அதனையடுத்து அந்த உரை நாடாளுமன்றப் பதிவிலிருந்து நீக்கப்பட்டது. எனினும் இவரது உரையின் காணொலி ஊடகங்களில் வெளிவந்துள்ளது. (ச-25-6)

## கிளிநொச்சி நபரொருவர் கடத்தப்பட்டு சித்திரவதை?

### பொலிஸார் விசாரணை

*கிளிநொச்சி,ஜூன் 28*
*கிளிநொச்சியில் காணாமற்போனார் எனத் தேடப்பட்டு வந்த நபரொருவர் 24 நாள்களின் பின் தன்னை ஒரு கும்பல் கடத்தி சித்திரவதை செய்தனர் என்று தெரிவித்து காயங்களுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.*
*கடந்த 2 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சிங்கராஜன் ஜெயக்குமார் என்பவரைக் காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. தற்போது இவர் வெட்டுக்காயங்களுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.*
*அவர் தனது வாக்குமூலத்தில், தன்னை ஒரு கும்பல் கடத்தி வைத்து சித்திரவதை செய்தது என்றும், வெவ்வேறு இடங்களுக்கு மாற்றி சித்திரவதை மேற்கொண்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.*
*சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்புப் பிரிவினர் சாட்சியங்களைப் பதிவு செய்ததுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-113)*



பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மறைந்த திருமதி ரெஜினா சம்பந்த நாதன் அறக்கட்டளையின் உதவித் திட்டத்தினூடாக பொருண்மியம் நலிவுற்ற குடும்பங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, பொதுநம்பிக்கை நிதிய நீதிபதி ஜிஹான் பிலபிட்டிய, சட்ட ஆலோசகரும் ஓய்வு நிலைநீதிபதியுமான அம்ஜாட், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ச-25-66)

# பெண்ணொருவரிடம் சங்கிலி அபகரிப்பு!

கிளிநொச்சி, மார்ச் 28
தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண்ணொருவரிடம் இருந்து தங்கச் சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது.
மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணை பின்தொடர்ந்து சென்ற இருவர், அவரை வீதியில் தள்ளி வீழ்த்திவிட்டு சங்கிலியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். பெண்ணுக்குக் காயங்களும் ஏற்பட்டுள்ளன. தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-113)



ஊடகவியலாளரும் மொழிபெயர்ப்பாளருமான ஜோசப் ஐயா எனறழைக்கப்படும் வின்சன் புளோரின்ஸ் ஜோசப்பின் 3 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.அமையத்தின் தலைவர் கு.செல்வகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன் கலந்துகொண்டு ஈகச் சுடரை ஏற்றி வைத்தார். (ப-20)


# மரண அறிவித்தல்

தோற்றம்
19 • 01 • 1940



மறைவு
27 • 06 • 2024

## திருமதி பூமணி அம்பலவாணர்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் முல்லைப்பிலவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி அம்லவாணர் அவர்கள் நேற்று (27.06.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற அம்பலவாணர் அவர்களின் அன்பு மனைவியும். சிவகாமசுந்தரி. சோதிநாதன் (மாகாண காணி ஆணையாளர். வட மாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். ரவிச்சந்திரன். தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும். ராகவன். ராகுலன். லக்ஷன். வசீகரன் தனுஷிகன். பவிதரன். வருண். துளசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்: குடும்பத்தினர்.
மகன் - 077 3618 499
மகள் - 077 6157 523

(CS 827) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதிச்சுற்றில் களம் காணவுள்ள வி.சி .கிங்ஸ் மற்றும் யங்ஸ் ஸ்ரார்

## றைனோஸ் கரப்பந்தாட்ட பிறிமியர் லீக்கின்

**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**உதயன் பத்திரிகையின் பிரதான அனுசரணையுடன் சுழிபுரம் றைனோஸ் விளை யாட்டுக்கழகம் நடத்திய றைனோஸ் கரப்பந்தாட்ட பிறிமியர் லீக்கின் இறுதிப் போட்டியில் வி.சி .கிங்ஸ் அணியும், யங்ஸ் ஸ்ரார் அணியும் மோதவுள்ளன.**

இறுதிப் போட்டி, சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் உதயராஜ் தலைமையில் வட்டுக்கோட்டை பிலவத்தையில் அமைந்துள்ள யங்ஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் உதயன் குழுமத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-25-125)

### சிறுபான்மையினர்...

2023 ஆம் ஆண்டுக்கான மதச் சுதந்திரம் தொடர்பான வருடாந்த அறிக்கையில் அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் பௌத்த மதத்தைப் பின்பற்றாதவர்கள் தங்களின் மத அனுட்டானங்களைக் கடைப்பிடிக்க தீவிரமான சவாலையே எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. பௌத்த கிராமங்களில் கிறிஸ்தவர்கள் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் அல்லது மதவழிபாட்டுக்காக பௌத்தசாசன அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என வேண்டுகோள் விடுப்பவர்களுக்கு ஆதரவாக அரச அதிகாரிகள் செயற்பட்டனர். கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஆராய்ந்தவர்கள் இதை வெளிப்படுத்தியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தையிட்டி என்ற இடத்தில் தனியார் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு அரசாங்கம், அரச அதிகாரிகள் வழியாகக் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்தது. குறித்த சட்டவிரோத விகாரையைச் சுற்றியுள்ள பகுதியில் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு 12 ஏக்கர் நிலமிருப்பதாகவும் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் இராணுவம் அந்தப் பகுதியை ஆக்கிரமித்துள்ளதாகவும் சிவில் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்றது முதல் தற்போதுவரை பொலிஸாரின் கண்காணிப்பினையும் துன்புறுத்தல்களையும் எதிர்கொண்டுள்ளதாக முஸ்லிம் அரசசார்பற்ற அமைப்புகள் தெரிவித்துள்ளன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட முஸ்லிம்களின் குடும்பத்தவர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களும் தாங்கள் தொடர்ந்தும் துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். அரசாங்க பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்ச்சியாக தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை விசாரணை செய்கின்றனர். அரசாங்கம் முஸ்லிம் சமூகத்தினை சிங்கள - பௌத்த சமூகத்தின் மேலாதிக்கத்துக்கான சனத்தொகை ஆபத்தாகக் கருதுகின்றது என சிறுபான்மை சமூகப் பிரதிநிதிகளும் அரசசார்பற்ற அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

அத்துடன், இலங்கையில் அனைத்து மதவழிபாட்டுத் தலங்களையும் பதிவுசெய்யவேண்டும் என்ற 2022 ஆம் ஆண்டிம் சுற்றுநிருபம் தற்போதைய சட்டத்தின் அடிப்படையிலானது இல்லை. அரசமைப்புக்கு முரணானது என சிவில் சமூக அமைப்பினரும் சட்டத்தரணிகளும் தெரிவிக்கின்றனர். அரசாங்கம் இந்தச் சட்டத்தை சிறுபான்மை இனத்தவரின் வழிபாட்டுத் தலங்களை இலக்குவைப்பதற்குப் பயன்படுத்துகின்றது - என்றுள்ளது. (அ-ம)

### நாய்க்கடிக்கு...

உயிரிழந்தவராவார். கடந்த 10 ஆம் திகதி மேற்படி சிறுமி நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார். மறுதினம் வீட்டார்கள் சிறுமியை கிளிநொச்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ளதால் அடுத்த மூன்று வருடங்களுக்கு ஊசி தேவையில்லை என்று மருத்துவமனைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து வீட்டுக்குத் திரும்பிய சிறுமிக்கு கடந்த 21 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து, அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்று அவர் உயிரிழந்தார். அந்த நாய் மேலும் ஐந்து பேரைக் கடித்திருந்த நிலையில், அவர்கள் அனைவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்த சிறுமியுடன் தொடர்பைப் பேணியவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருததுவமனையின் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-113-26)

### வடக்கைப்...

இது தொடர்பில் இந்தியத் தூதரகத்தால் இலங்கை அரசாங்கத்துக்குக் கோரிக்கைக் கடிதமொன்று அனுப்பப்பட்ட நிலையில், அந்தக் கடிதம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மன்னாரின் மணல் திட்டுகள், இராட்சத மரங்கள் மற்றும் நெடுந்தீவு உள்ளிட்ட எட்டு பிரபலமான இடங்களிலேயே ஆளில்லா விமானக் கமராக்களைப் பயன்படுத்தி படமெடுக்க அனுமதி கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு படமாக்கும் காட்சிகள் இலங்கைக்கு யோகாவை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிக்கு பயன்படுத்தப்பட உள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ம)

### அதிபர்களும்....

குத் தீர்வு வழங்குமாறு கோரி அதிபர், ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம், இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் போராட்டத்தில், நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்புகைக்குண்டு வீச்சு என்பன நடத்தப்பட்டமையைக் கண்டித்தே அதிபர்களும் ஆசிரியர்களும் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக, வடமாகாணத்திலும் தேசிய அளவிலும் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் நேற்றும் ஸ்தம்பித்தன. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகவிருந்த நிலையில் அவை பிற்போடப்பட்டு இன்று ஆரம்பமாகவுள்ளன. (அ-ம-66)

### ஆசிரியர்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கண்டி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் ஸ்ரீ வரகாகொட ஞானரத்ன தேரரை நேற்று வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்காக ஆசிரியர்கள் காலைவேளையில் பாடசாலைகளில் இருக்கவேண்டியது கட்டாயமானது. ஏதேனும் காரணங்களுக்காக எதிர்வரும் காலங்களில் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருக்குமாயின் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை இழப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகும். எனவே, மாணவர்கள் இவ்வாறான நிலைமைக்கு தொடர்ச்சியாக முகம் கொடுக்கும் பட்சத்தில் ஆசிரியர்சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் - என்றார். (அ-ம-66)

### எரிவடைந்த...

உடுவில் தெற்குப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வெற்றுக் காணிக்குள் மோட்டார் சைக்கிள் ஒன்று முற்றாக எரிந்த நிலையில் காணப்படுவதாக, சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த மோட்டார் சைக்கிளினுடையது என்று நம்பப்படும் இலக்கத் தகடு ஒன்று காணியின் பிறிதொரு இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இலக்கத் தகட்டின் அடிப்படையில், மோட்டார்சைக்கிளின் உரிமையாளரைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம)

### கற்றல்..

துள்ளார். இது தொடர்பில் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்ததாவது:-

அதிபர், ஆசிரியர்களின் சுகவீன விடுப்புப் போராட்டம் கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்ற நிலையில், இந்தப் போராட்டங்கள் இன்றுடன் (நேற்றுடன்) முடிவுக்கு வந்துள்ளன. நாளை (இன்று) கற்றல் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பும். போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் -என்றார். (அ-ம-26-125-66)

### பொலிஸ்...

வெட்ட முற்பட்ட சமயம் தாதியர்கள் சத்தமிட்டதால் அந்த நபர் தப்பியோடியுள்ளார்.

இரண்டு வாரத்துக்கு முன்னரும் மருத்துவமனைக்குள் புகுந்தவர்களால் தாதி மற்றும் காவலாளி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனவே, தற்போதுள்ள பாதுகாப்பற்ற நிலையைக் கருத்திற்கொண்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு இரண்டு பொலிஸாரை நியமித்து, மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மருத்துவமனைத் தரப்பால் கோரப்பட்டுள்ளது. (அ-ம-100)

### நோயாளர்...

நாள்களாக நுழைவாயில் காப்பாளராகக் கடமையாற்றிய இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடமுருட்டிக் குளத்தை சீரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தை முழுமையாக புனரமைப்பதற்கு கடந்த பத்தாண்டு காலமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குளத்தின் அணைக்கட்டின் பல இடங்களில் சேதங்கள் காணப்படும் நிலையில் மழை காலங்களில் மண் மூடைகள் அடுக்கி குளத்தைப் பாதுகாக்கும் நிலைமை ஏற்படுகின்றது.

குளத்தின் அணைக்கட்டை முழுமையாகப் புனரமைப்பதன் மூலம் மழை காலத்தில் கூடுதலான நீரினைச் சேமிக்கமுடியும். எனவே குளத்தை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-25-13)

## டயானாவின் வழக்கு; நீதிபதிகள் விலகல்

கொழும்பு, ஜூன் 28

நீதிமன்றத்தை அவமதித்தார் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மீது தாக்கல் செய்த மனுவை பரிசீலிப்பதில் இருந்து இரண்டு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விலகியுள்ளனர்.

வெலிகம மாநகரசபையின் உறுப்பினர் பதவியை நீக்கி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் தெரிவித்த கருத்துகள் மூலம் டயானா கமகே நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் என வெலிகம மாநகரசபையின் முன்னாள் தலைவர் ரெஹான் ஜய விக்ரமவால் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மனுக்களைப் பரிசீலனை செய்வதிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக, நீதிபதிகளாகக் கடமையாற்றிய குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அறிவித்துள்ளனர். (ச-இ)



இலங்கைக் கடற்படையின் வடக்குப் பிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் ரோஹித்த அபேசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை, ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிநேகபூர்வ ரீதியாக சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். யாழ். குடாநாட்டு மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரையும், தீவுப்குதி மக்களுக்கான மருத்துவ வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் இலங்கைக் கடற்படை முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன. (எ-22-20)

## நினைவேந்தலும் நன்றி நவிலலும்

பிறப்பு 10 . 08 . 1938



இறப்பு 29 . 05 . 2024

### கனகம்மா (கனகேஸ்வரி) நடராசா
(English Special Trained, தமிழ் பண்டிதை)

கடந்த 29.05.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளி விளக்கு அமரர் கனகேஸ்வரி நடராசா (கனகேஸ் ரீச்சர்) அவர்களின் மறைவறிந்து, நேரிலும் பல்வேறு வழிகளிலும் தமது அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்த உற்றார், உறவினர் நண்பர்களுக்கும், அன்னாரின் இனிமையான கால நினைவுகளை பல்வேறு வழிகளிலும் மீட்டுக் கொண்டவர்களுக்கும், இக்கட்டான இவ்வேளையில் இன்னும் பல்வேறு வழிகளிலும் தமது பேரன்பை வெளிப்படுத்தியவர்களுக்கும், அன்னார் சுகவீனமுற்றிருந்த வேளை அர்பணிப்புடன் பணியாற்றிய மருத்துவ அணியினருக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் அந்தியேட்டி கிரியைகளிலும் பங்காற்றிய சமயக் குருமார்களுக்கும், மற்றும் இவ்விடதில் நினைவுபடுத்தப்படாமல் தவறவிடப்பட்டிருக்கக் கூடிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் சார்பில் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

'திருவேலகம்'
70, ஆசிரியர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(CR 42721) V-1

தகவல்:
குடும்பத்தினர்.
071 847 3862

**கடை வாடகைக்கு**

கல்வியங்காடு பிரதான வீதியில்
கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 175 0746, 077 806 9790
(CS/55507) J-1

**கடை வாடகைக்கு**

யாழ் நகர் K.K.S வீதியில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 071 081 7810
077 711 2412

**மணமகள் தேவை**

வெளிநாட்டில் வசிக்கும் 55+ விவாகரத்தான சைவ கௌரவ குடும்பம் (V) ஆணுக்கு, சைவ வெளிநாடு செல்ல விரும்பம் உள்ள பெண்ணை எதிர்பார்க்கின்றோம். Whatsappல் தொடர்பு கொள்ளவும்.
+94 702 389 668
(CS/55504) J-1

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684
(CS/7777) J-1

**வேலையாட்கள் தேவை**

யாழ். கோப்பாய் இருபாலைச் சந்தியில் ஆரம்பிக்கவிருக்கும் Cafe ஒன்றிற்கு
**ஆண், பெண் பணியாளர்கள் தேவை.**
வயது எல்லை 18 - 30. கோப்பாய், இருபாலை பகுதிகளை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
கருடா Cafe
பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி
077 050 0008
(CS/55508) J-1

## சமாதான நீதவானாக பதவியேற்பு



Best Wishes

நேற்றயதினம் (27.06.2024) இலங்கை யாழ். மாவட்ட சமாதான நீதவானாக பரத் மோட்டோஸ், பரத் சேல்ஸ் மற்றும் பரத் ரான்ஸ்போட் நிறுவன உருமையாளர்

**Lion. K.Premkanth MJF**

அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
**நீதிபதி திரு. அ. அ. ஆனந்தராஜா**
முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

**பணிகள்:**

தலைவர் : ஆரியகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்.
தலைவர் : ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகம்.
உறுப்பினர் : மனிதஉரிமை ஆணைக்குழு.
தலைவர் : யாழ்ப்பாணம் புதிய உலகம் லயன்ஸ் கழகம் (2023/2024)
வலயத்தலைவர் : லயன்ஸ் கழகம் மாவட்டம் (306 பி1 2024/2025)

இவர் இன்னும் பல நற்பணிகள் செய்து பல சாதனைகள் படைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!

Best Wishes

லயன்ஸ் கழக நண்பர்கள் வட்டம்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org